# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண் 9476/விசாரணை/2009**

**கோவையில் விசாரணை நடைபெற்ற நாள் 18-9-2009**

முன்னிலை: திரு ஜி. இராமகிருஷ்ணன, இ.ஆ.ப.(ஓ.)
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர்: திரு வி. சண்முகம், **D-72,**சேரன் நகர், சின்னத் தொட்டி பாளையம், பொள்ளாதி அஞ்சல், காரமடை (வழி), மேட்டுப்பாளையம் வட்டம்.

பொது அதிகார அமைப்பு: பொதுத் தகவல் அலுவலர், தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மேட்டுப்பாளையம் சாலை, கோயமுத்தூர் - 641 043.

*****

இவ்வழக்கின் இன்றைய (18-9-2009) விசாரணைக்கு மனுதாரரும், பொது அதிகார அமைப்பின் சார்பில் பொதுத் தகவல் அலுவலரும் வ்நதிருந்தனர்.

மனுதாரர் 30-1-2009 தேதியிட்ட மனுவின் மூலமாக ஏழு தகவல்கள் கோரியுள்ளார். ஏழு கேள்விகளுக்கும் 24-2-2009 மற்றும் 27-2-2009 ஆகிய தேதிகளில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. மனுதாரர் கேள்வி எண் 6 மற்றும் 7-க்கு இன்னமும் தகவல்கள் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்தார். ஆனால், பொதுத் தகவல் அலுவலர் அத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அதற்கான கோப்பினுடைய நகலை ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கத் தயாராக இருப்பதாகக் கூறி ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார் அத்துடன், மறுபடியும் ஒரு முறை மனுதாரரின் அனைத்து கேள்விகளையும் வரிசைப்படுத்தி 15-4-2009 அன்று ஒட்டுமொத்தமாக எல்லாக் கேள்விகளுக்கும் பதில் வழங்கப்பட்டுள்ளன என்றும் கூறினார். ஆனால் மனுதாரர் அதுபோன்ற தகவல் தனக்கு வந்துசேரவில்லை என முறையிட்டார். அந்தத் தகவல்கள் அனைத்தையும் சான்று அஞ்சல் மூலமாக அனுப்பியதாக பொதுத் தகவல் அலுவலர் குறிப்பிட்டார். எனினும், மனுதாரர் அந்தத் தகவல்கள் பெறப்படவில்லை எனக் கூறியதன்

காரணத்தால், அத் தகவல்களை மீண்டும் வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலர் அறிவுறுத்தப்பட்டார். அவ்வாறே, விசாரணையின்போது அவை மனுதாரருக்கு வழங்கப்பட்டன. இவ்வழக்கில் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் தேவையில்லை.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 8.10.09**
**ஆணையத்தின் ஆணைப்படி** **உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண் 9476/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
மேட்டுப்பாளையம் சாலை,
கோயமுத்தூர் - 641 043.

<u>வழக்கு எண் 9476/விசாரணை/2009</u>
திரு வி. சண்முகம்,
**D-72,**சேரன் நகர்,
சின்னத்தொட்டி பாளையம்,
பொள்ளாதி அஞ்சல், காரமடை (வழி),
மேட்டுப்பாளையம் வட்டம்,
கோவை மாவட்டம்.